செ.வெ.எண் : 40 நாள் : 28.03.2021

**கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் தேர்தல் பொது பார்வையாளர்கள் மற்றும் செலவின பார்வையாளர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., அவர்கள் ஆலோசனை** !!!

********************

சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2021 முன்னிட்டு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இன்று (28.03.2021) கோயம்புத்தூர் மாவட்டத்தில் அனைத்து சட்டமன்ற தொகுதி செலவின பார்வையாளர்கள் மற்றும் பொது பார்வையாளர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தேர்தல் பணிகளை கண்காணிக்க பொதுப்பார்வையாளர்களாக 7 மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளையும், 6 இந்திய வருவாய்ப்பணி அதிகாரிகளையும், காவல் பார்வையாளர்களாக 2 இந்திய காவல் பணி அதிகாரிகளையும் இந்திய தேர்தல் ஆணையம் நியமனம் செய்துள்ளது.

| வ. எண். | பொது பார்வையாளர்கள் | சட்டமன்ற தொகுதி | செலவின பார்வையாளர்கள் | சட்டமன்ற தொகுதி எண் மற்றும் பெயர் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி.ஸ்வரோசிஸ் சோமவான்சி இ.ஆ.ப., | 116 சூலூர் | திரு. அமிதாப் ஷா இ.வ.ப., | 111. மேட்டுப்பாளையம் |
| 2. | திரு.ஹரிசிகேஷ் மொடக் இ.ஆ.ப., | 111 மேட்டுப்பாளையம்<br>117.கவுண்டம்பாளையம் | திரு. மகேஷ் ஜி. ஜிவாடே, இ.வ.ப., | 116. சூலூர்<br>119. தொண்டாமுத்தூர் |
| 3. | திரு.சவுரப் பாகத் இஆ.ப., | 118.கோவை (வடக்கு) | திரு. விஜய் குமார் சிங், இ.வ.ப., | 117. கவுண்டம்பாளையம்<br>118. கோவை வடக்கு |
| 4. | திரு.கோபால் மீனா இ.ஆ.ப., | 119. தொண்டாமுத்தூா<br>122. கிணத்துக்கடவு | திரு. ஷஷாங் திவேதி, இ.வ.ப., | 120. கோவை தெற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | **திரு.ராஜேஷ் சுகுமார் டோப்போ இ.ஆ.ப.,** | 120.கோவை (தெற்கு) | **திரு. ஹித்தேந்திர பௌராவ்ஜி நினவே, இ.வ.ப.,** | 121. சிங்காநல்லூர்<br>122. கிணத்துக்கடவு |
| 6. | **திரு.வினோத் பிரசாத் இ.ஆ.ப.,** | 121.சிங்காநல்லூர் | **திரு. ராம் கிருஷ்ண் கேடியா,இ.வ.ப.,** | 123. பொள்ளாச்சி<br>124. வால்பாறை |
| 7. | **திருமதி.ஷீமா வியாஸ் இ.ஆ.ப.,** | 123.பொள்ளாச்சி<br>124.வால்பாறை | | |
| | | **காவல் பார்வையாளர்கள்** | | |
| 8. | **திரு.ஹிர்மேத் சுதிர் கல்லயா இ.கா.ப.,** | 111. மேட்டுப்பாளையம்<br>116. சூலூர்<br>119. தொண்டாமுத்தூர்<br>117. கவுண்டம்பாளையம்<br>118. கோவை வடக்கு | **திரு.மன்மோகன் குமார் பாஷல் இ.கா.ப.,** | 120. கோவை தெற்கு<br>121. சிங்காநல்லூர்<br>122. கிணத்துக்கடவு<br>123. பொள்ளாச்சி<br>124. வால்பாறை |

இவ்அலுவலர்கள் இன்று (28.03.2021) மாவட்ட ஆட்சித்தலைவருடன் ஆலோசனை மேற்கொண்டனர்.

இவ்ஆலோசனைக் கூட்டத்தில் தேர்தல் கண்காணிப்பு மற்றும் பறக்கும் படை அலுவலர்களின் செயல்பாடு, CVigil புகார் பதிவு, தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு, தபால் வாக்குப்பதிவினை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல், தேர்தல் பணியாற்ற விருப்பம் உள்ள தன்னார்வலர்களின் விவரம் பெறுதல், வாக்கு எண்ணிக்கை மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள், கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களில் இருப்பு, வேட்பாளர்களின் பிரச்சார செலவினங்களை துல்லியமாக கணக்கிடுவது, தேர்தல் விதிமீறல் தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் விவரம், பதட்டமான வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய பாதுகாப்பு பணிகள், மற்றும் நுண்பார்வையாளர்கள் (Micro Observers) நியமித்தல், கண்காணிப்பு கேமராக்கள் பொறுத்தப்படுவதை உறுதி செய்தல், வாக்குப்பதிவு தினத்தன்று வாக்குப்பதிவு மையங்களில் கூட்டம்

கூடுவதை தவிர்க்க மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடு நடவடிக்கை குறித்து விரிவாக ஆலோசனை செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையாளர் திரு.டேவிட்சன் தேவாசீர்வாதம் இ.கா.ப., மாவட்ட காவல் கண்கணிப்பாளர் திரு.அர.அருளரசு இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், உள்ளிட்ட பல்வேறு தேர்தல் பணி தொடர்பு (Nodel Officers) அலுவலர்கள், அனைத்து சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**